# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03.02.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் சூரா அந் நஹ்ல் –ன் 129 வது வசனத்தை ஓதினார்கள்:**

*இன்னல்லாஹ மஅல்லஸீனத்தகவ் வல்லஸீனஹும் முஹ்ஸினூன். பொருள்: நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)*

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் எல்லா கட்டளைகளிலும் தக்வா மற்றும் தூய்மை மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே தக்வாவே இறை நெருக்கத்தைப் பெற்றுத் தருகிற அடிப்படை விஷயமாகும். நான் ஓதிய இந்த வசனத்தை எல்லாரும் கேட்டீர்கள். அதன் மொழியாக்கத்தையும் எடுத்துரைத்தேன்.

அல்லாஹ் கூறுகிறான்: *இன்னல்லாஹ மஅல்லஸீனத்தகவ் - நிச்சயமாக அல்லாஹ் தக்வாவை மேற்கொள்பவர்களுடன் இருக்கிறான்.* முதலில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் யாருடன் இருக்கிறானோ அவர்களின் வழியை மேற்கொண்டனர். அது தக்வாவின்படி செல்பவர்களின் வழியாகும். இதன் மூலம் ஒரு கருத்து தெளிவாகி விட்டது.

உலகில் இருவகை மக்கள் உள்ளனர். ஒரு வகையினர் தக்வாவின்படி நடப்பவர்களும், இறை திருப்தியைப் பெறுவதற்காக ஒவ்வொரு நன்மையையும் செய்பவர்களும், ஒவ்வொரு நன்மையையும் செய்வதற்கு முயற்சி செய்பவர்களும் ஆவர்.

இரண்டாவது வகையினர் நல்ல காரியங்களைச் செய்கின்றனர். எனினும் இறைவன் அவர்களின் முன் இருப்பதில்லை அல்லது அவர்கள் ஒவ்வொரு பணியைச் செய்யும் போதும் இறைவன் நம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறான்; பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நினைப்பதில்லை. அவர்களுள் சிலர் இந்த அளவுக்கு மட்டும் நம்புகின்றனர். இறைவன் இருக்கிறான். அவன்தான் வானங்கள், பூமியைப் படைத்தவன் ஆவான். ஆனால் அல்லாஹ்வின் திருப்தியைக் கவனத்தில் கொள்வதில்லை. ஒரு நல்ல வேலையைச் செய்யும் போது கூட இறைவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. முழுக்க முழுக்க இறைவன் மீது உறுதி கொள்வதில்லை. அல்லாஹ்வின் இருப்பின் மீது ஈமான் கொள்வதில்லை. அல்லாஹ்வின் இருப்பையே மறுப்பவர்களும் ஆவர். இந்த மக்களுடனும் நான் இருக்கமாட்டேன் என்று இறைவன் கூறுகிறான்.

முதல் வகை மக்களுடன் நான் இருப்பேன். அவர்கள் தக்வாவின்படி நடப்பவர்கள் ஆவர். ஆனால் அல்லாஹ்வின் படைத்துக் காத்தோம்பும் பண்பு எப்படிப்பட்டதெனில் தக்வாவின்படி நடக்காதவர்களுக்கும் கூட சில விஷயங்களை – சில நிஃமத்துகளை அவன் வழங்குகிறான். அதுவும் ஓர் இறையச்சம் உள்ளவருக்கு வழங்கும் அளவுக்கு வழங்குகிறான். ஆனால் அவை உலகப் பொருள்களின் பங்கே ஆகும். உதாரணமாக, சூரிய ஒளி, காற்று போன்ற இவற்றிலிருந்து ஒரு நம்பிக்கையாளர், இறைச்சமுள்ளவர் பங்கு பெறும் அதே அளவுக்கு ஒரு நாத்திகரும் பங்கு பெறுகிறார் அல்லது உலகியல் பொருள்கள், அறிவியல் முன்னேற்றத்தால் விளைந்த கல்விகள், அனுபவங்கள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றிலிருந்து மூளையைப் பயன்படுத்தும் அளவுக்கு ஒரு நாத்திகரும் பலன் பெறுவார். அதுவும் ஓர் இறையச்சமும், தூய்மையும் உள்ளவர் பயன் பெறும் அளவுக்கு பலன் பெறவும் செய்கிறார். உதாரணமாக, பூமியின் விளைச்சலில் இருந்து ஒரு நாத்திகரும் பலன் பெறுகிறார். ஓர் இறையச்சம் உள்ளவரும் பலன் பெறுகிறார். தக்வாவின்படி செல்லாதவர்கள் நாத்திகர்கள்,

இறைவனை ஏற்காதவர்கள் ஆகியோர் கூட இறைவனது *ருபூபிய்யத் (படைத்துக் காத்தோம்புதல்), ரஹ்மானிய்யத் (கேட்காமலேயே வழங்குதல்)* ஆகிய பண்புகள் வேலை செய்யா விட்டால் ஒரு வினாடி கூட வாழ்வது சிரமம் ஆகி விடும்.

எனவே மனிதனை இவ்வுலகில் படைத்து விட்டு அவனுக்கு, இறைவன் நல்வழி மற்றும் தீய வழி ஆகிய இரு வழிகளை வைத்துள்ளான். ஆனால் சில விஷயங்களில் இந்த இரு வழிகளில் அமல் செய்பவர்களுக்கும் சமமாக நிஃமத்துகளை தருகிறான். எவ்வாறிருப்பினும், இறைவன் ஒவ்வொருவருக்கும் ஓர் இயற்கைச் சட்டத்தை வைத்துள்ளான். இதைக் குறித்து சற்று விளக்கம் தருகிறேன். அதாவது இறைவன் தனது வல்லமையின் மாட்சிமையைக் காட்டுவதற்காக ஒரே விதமான உழைப்பிலும் கூட ஒரு மூஃமின் மற்றும் முத்தகியின் முயற்சிகளுக்கு அதிகமான பலன்களை வழங்கி விடுகின்றான். உதாரணமாக, சாதாரணமாகத் தென்படும் விவசாயத்தில் துஆவின் காரணத்தால் அதிகமாக விளைச்சலை வழங்கி விடுகின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சிந்துவிலுள்ள, சிந்த் –ல் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களை மேற்பார்வை செய்ய சில பெரியவர்களை அனுப்பினார்கள். அதில் குதரத்துல்லாஹ் சாஹிப் சனோரியும் இருந்தார்கள். இதனை முன்னரும் ஒரு முறை கூறியுள்ளேன். ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சுற்றுப்பயணம் சென்ற போது வயலைப் பார்த்தார்கள். சஹாபியான அந்த மவ்லவியிடம் இதில் தோராயமாக எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்று கேட்டார்கள். அவர் தனது மதிப்பீட்டைக் கூறினார். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் போன்றோர்களும் உடன் இருந்தனர். அவர்களின் கருத்தின்படி அவரது மதிப்பீடு தவறாக இருந்தது. மவ்லவி சாஹிப் சற்று அதிகமாகவே தனது கணிப்பைக் கூறினார்கள் என்று பேசிக் கொண்டனர். மவ்லவி சாஹிப் இதனைக் கேட்டு விட்டு கூறினார்கள். மியான் சாஹிப் நான் மதிப்பிட்ட அளவு குறைந்த அளவுதான். கண்டிப்பாக அது விளையும். நான் இந்த வயலின் நான்கு மூலைகளிலும் நஃபில் தொழுதுள்ளேன். எனது நஃபில் விளைச்சலை நிச்சயம் அதிகமாக்கும் என்ற உறுதி எனக்கு உள்ளது என்றார்கள். இந்த வகையில் அதே அளவு விளைச்சல் கிடைத்தது. இவ்வாறு இறைவன் ஒரே விதமான பருவநிலையில் ஒரே விதமான நிலத்தில் போடப்படுகின்ற தானியங்கள், உரங்கள் துஆவின் விளைவாக அதிகப்படியாக விளைச்சலைத் தருகின்றன. இவ்வாறு இறை இருப்பிற்கான சான்றை வழங்குகிறான். உலக விஷயங்களில் கூட ஓர் இறையச்சம் உள்ளவருக்கு இறைவன் உடனிருக்கிறான் என்பதற்கு ஆதாரம் கிடைக்கிறது.

ஆனால் இறைவன் மீது முழுமையான ஈமான் கொள்பவருக்கு இந்த பௌதீக உலகம் தவிர ஓர் ஆன்மீக உலகமும் உள்ளது. அதன் பலன் – அதன் ரசனை உலகவாதிகளுக்கு தென்படாது; தென்படவும் முடியாது. தக்வாவின்படி செல்பவர்களின் சிந்தனை மிக உயர்வானதாக இருக்கிறது. அவர்கள் இவ்வுலகை விட எட்டிச் சென்று அதற்கு அப்பாலும் சிந்திக்கின்றனர். மறைவானவற்றின் மீது ஈமான் கொள்கின்றனர். மறுமையின் மீது உறுதி கொள்கின்றனர். இறைவனது வாக்குறுதியின் மீது முழுமையான ஈமான் மற்றும் யகீன் இருக்கிறது. அவர்கள் துஆவுக்காக கைகளை உயர்த்தும் போது கபூலிய்யத்தின் அடையாளத்தைப் பார்க்கின்றனர். இக்காலத்தில் இறைவனுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்தும் வழியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கற்பித்தார்கள். பல அஹ்மதிகள் அல்லாஹ்வுடன் சேர்ந்திருந்த அனுபவத்தைப் பெற்றுள்ளனர். அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பு வைத்துள்ள காரணத்தால் கனவு, ருஃயா, கஷ்ஃப் ஆகியவற்றின் வடிவில் இவ்வாறு நடக்கும் என்று இறைவன் கூறுகின்றான். முற்றிலும் அவ்வாறே நடக்கிறது. பிறகு இந்த அண்மைக்கு இன்னொரு பொருள் உண்டு. இறைவன் மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கைக்கு இறைவன் அளித்துள்ள வாக்குறுதிகளையும் நிறைவேற்றித் தருவான்.

எனவே இறைவன் கூறுகிறான்: மனிதன் தக்வாவில் நிலைநின்றால் உலக வாழ்க்கையின் வெகுமதிகளையும் பெறுவீர்கள். மறுவுலக வாழ்வின் வெகுமதிகளையும் பெறுவீர்கள். ஒரு முத்தகி அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக ஒரு அமல் செய்யும் போது அவருக்கு உலகம் மற்றும் மறுமையின் நற்பலன்கள் கிடைக்கின்றன என்பது இறைவனது வாக்குறுதியாகும். நான் ஏற்கனவே கூறியது

போன்று இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக எவர் நற்செயல் செய்வாரோ அவரே முத்தகி ஆவார். இது மிகவும் அவசியமாகும். அந்த நற்செயல்கள் சாலிஹான செயல்களைச் செய்பவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்கின்றனர். அவர்களே தக்வாவின்படி நடப்பவர்கள் ஆவர். பலர் நற்செயல்கள் செய்கின்றனர். ஆனால் இறைவனுக்காக செய்வதில்லை. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்வதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் *முத்தகி (இறையச்சமுள்ளவர்)* என்பதற்கு வரையறை செய்துள்ளார்கள். அதன்படி ஒவ்வொரு சிறிய, பெரிய பாவத்தில் இருந்தும் தப்பிப்பது அவசியமாகும். பாவத்திலிருந்து தப்புவது மட்டும் போதாது. மாறாக நன்மைகளில் உயர்ந்த நல்லொழுக்கங்களில் முன்னேறுவது அவசியமாகும். பிறகு இறைவனுடன் உண்மையான விசுவாசத் தொடர்பு கொள்வதும் அவசியமாகும். இவை அனைத்தும் இருந்தால் ஒரு மனிதர் முத்தகி என்று அழைக்கப்படுவார். இறைவனுடன் உண்மையான விசுவாசத் தொடர்பு என்றால் என்ன?

அவனது இபாதத்தின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்தல், முடிந்தவரை இறைவனது கட்டளைகளின்படி அமல் செய்வதற்கு தமது எல்லா வகையான முயற்சிகளையும் செய்தல் ஆகிய இந்நிலை ஏற்படும் போது தக்வாவுக்கு எடுத்து இறைவன் கூறுகிறான். *வல்லஸீனஹும் முஹ்ஸினூன்.* முஹ்ஸின் என்பதன் பொருள்: ஒருவருக்கு வெகுமதி வழங்குதல், எந்த முயற்சியும் செய்யப்படாத நிலையிலும் ஒருவருக்கு கருணை காட்டுதல் என்பதாகும். இவ்வாறு வெகுமதி வழங்குபவர்கள் முஹ்ஸின் என்று அழைக்கப்படுகின்றனர் அல்லது ஒருவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் என்பதாகும். இன்னொரு பொருள்: மனிதன் தனது பணிகளில் முழுமையான நிலையை அடைதல்; தனது பணியைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளுதல்; ஒவ்வொரு அமலையும் இடம், சூழல் அறிந்து மிகச் சிறப்பாக செய்தல் என்பதாகும். இவ்வாறு முஹ்ஸின் இருவகைப்படுவர். ஒரு பிரிவு பிறருக்காக வருந்தி அவர்களுக்கு தொண்டு செய்ய எப்போதும் தயாராக இருப்பவர். அவர் எந்தப் பிரிவு அல்லது மதத்தை உடையவராக இருந்தாலும் சரியே. யார்? எந்த சமுதாயத்தவராக இருப்பினும் அவருக்கு தொண்டாற்றுவதற்காக நியமிக்கப்பட்டவர். எனவே, நாம் மனித நேயத்திற்காக சேவை செய்ய வேண்டும். பிறகு இதுவும் முஹ்ஸின்களின் பண்பாகும். அதாவது நேரம் கிடைக்கும் போது பிறருக்கு உதவியாக சேவையில் ஈடுபடுதல்; பிறருக்கு எந்த அளவுக்கு எளிமையை வழங்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்குதல் போன்றதாகும். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இந்த உணர்வுடன் மனித குலத்திற்கு தொண்டாற்றுவது கடமையாகும். அல்லாஹ்வின் அருளால் இந்த உணர்வுடன் பெரும்பாலான அஹ்மதிகள் தொண்டு செய்கின்றனர்; பணி செய்கின்றனர். நிச்சயமாக அவர்கள் முஹ்ஸின்கள் தான். ஆனால் செய்த உபகாரத்தைச் சொல்லிக் காட்டுபவர்கள் அல்லர். உபகாரம் செய்து விட்டு சொல்லிக் காட்டுபவர் முஹ்ஸின் அல்லர். சொல்லிக் காட்டி விட்டால் பிறகு அதில் தக்வா, நல்லொழுக்கம் இருக்காது. தக்வா என்பது உபகாரம் செய்து விட்டு பிறகு சொல்லிக் காட்டாமல் இருப்பதுதான். எனவே நமது உதாரணங்களையே தருகிறேன். நமது பொறியாளர்கள், இளைஞர்கள், தன்னார்வத் தொண்டர்கள், மருத்துவர்கள் அல்லது பிற துறையைச் சேர்ந்தவர்கள் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பல திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ள இடங்களுக்கு பணி செய்ய செல்கின்றனர். அங்குள்ள உள்ளூர்வாசிகளின் குடிநீருக்காக கை பம்புகள் பொருத்துகின்றனர். மின்சார வசதி செய்து தருகின்றனர். அவர்களுக்காக பள்ளிக்கூடங்கள் கட்டுகின்றனர். அதன் மூலம் அவர்களுக்கு கல்வி வசதி எளிதாக கிடைப்பதற்காக செய்கின்றனர்.

கிளினிக் மற்றும் மருத்துவமனைகள் அமைக்கின்றனர். அவர்களின் தேக ஆரோக்கியத்திற்காக வசதிகள் எளிதாகவும், அவர்களின் துன்பங்களைப் போக்கவும் வசதி செய்கின்றனர். பிறகு ஆசிரியர்கள், மருத்துவர்கள் அங்கு பலப்பல வருடங்கள் தங்கியிருந்து பணி செய்கின்றனர். மிகவும் இடர்களுக்கிடையில் அங்கு வசிக்கின்றனர். அங்குள்ள சில ஊர்களில் தண்ணீரும் இல்லை – மின்சாரமும் இல்லை, இருந்தும் தொண்டு செய்யும் உணர்வுடன் அங்கு தங்குகின்றனர். முஹ்ஸின்களில் இடம் பெறுவதற்காகவே அங்கு செல்கின்றனர். அந்த தொண்டுகள் மற்றும் நற்காரியங்களை எந்தப் பேராசையின் விளைவாகவும் அவர்கள்

செய்யவில்லை. மாறாக, முழுக்க முழுக்க அல்லாஹ்வின் தக்வாவை உள்ளத்தில் கொண்டவாறு மனித குலத்திற்கு சேவை செய்வதற்காகவே அங்கு இருக்கின்றனர். அதுபோன்று உலகின் பல்வேறு நாடுகளில் புயல் பூகம்பம் போன்றவை ஏற்படும் போது நமது மருத்துவர்கள், தன்னார்வத் தொண்டர்கள், Humanity First –ல் பணி செய்பவர்கள் போன்றோர் தொண்டாற்று கின்றனர். எந்த பேராசையினாலும் செல்வதில்லை. மாறாக தூய்மையாகவே அல்லாஹ்வின் திருப்தியைப் பெற செல்கின்றனர். இன்னும் பலர் அங்கு தொண்டு செய்கின்றனர். ஆனால் அவர்களின் நோக்கமோ இறை திருப்தியாக இருப்பதில்லை. தொண்டு செய்பவர்கள், நன்மை செய்பவர்கள், தமது அறிவு மூலமாக பிறருக்கு பலன் அளிப்பவர்கள் முழுக்க முழுக்க இறைவனை மட்டும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்கின்றவர்களாகிய இவர்களே முத்தகியும் ஆவர்; முஹ்ஸினும் ஆவர்.

நான் ஏற்கனவே ஒரு குத்பாவில் கூறியுள்ளேன். அஹ்மதி எஞ்சினியர்கள் ஃபுர்கினோஃபாஸோவில் ஒரு மாதிரி கிராமம் உருவாக்கினர். அதில் மின்சாரம், தண்ணீர் வசதி, நடைபாதைகள், தெரு விளக்குகள், சமுதாயக் கூடம் போன்ற உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யத்தக்க வசதிகள் உருவாக்கப்பட்டு இயங்குகின்றன. அடுத்து சிறிய அளவில் பசுமை வீடுகள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் உள்ளூரின் காய்கறித் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கு தண்ணீர் ஏற்பாடுகள் மற்றும் கை பம்புகளும் நமது ஆட்கள் உருவாக்குகின்றனர். இந்தப் பணிகளைச் செய்கின்றனர். பணி முடிந்ததும் உள்ளூர்வாசிகளுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. எந்த அளவுக்கு மகிழ்ச்சி என்றால் அது காணத்தக்க ஒன்றாகும். அதனை படமெடுத்து வருகின்றனர். நமது சாதாரண பணி அவர்களின் பார்வையில் எவ்வளவு பெரிய பணியாக உள்ளது? எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? எவ்வளவு மகிழ்ச்சி அவர்களின் முகங்களில் தென்படுகின்றன. ஐந்து மைல் தூரத்திலிருந்து 8-10 வயது குழந்தைகள் தண்ணீரை தலையில் சுமந்து கொண்டு எடுத்து வருகின்றனர். இப்போது குடிப்பதற்கு தூய நீர் வீட்டிலேயே கிடைப்பது அவர்களைப் பொருத்தவரையில் பெரிய நிஃமத் ஆகும். இந்த எல்லா பணிகளும் இங்கு எந்த பிரதிபலன் கருதியும் செய்யப்படுவதில்லை. அல்லது ஒருபோதும் சொல்லிக் காட்டப்படுவதும் இல்லை. இன்னும் சொல்வதாயின் நமது இளைஞர்கள், எஞ்சினியர்கள் பணியை முடித்து திரும்பும் போது அம்மக்களிடம் வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவிக்கின்றனர். வருங்காலத்திலும் இன்ஷா அல்லாஹ் செய்வோம் என்று வாக்களிக்கின்றனர். இவ்வருடம் ஐந்து மாதிரிக் கிராமங்கள் அங்கு உருவாக்கப்படுகின்றன. இன்ஷா அல்லாஹ். சில நாடுகளின் கிளை அமைப்புகள் உதாரணமாக அமெரிக்கா, U.K.வின் அன்ஸாருல்லாஹ்வினர் இந்தச் செலவுகளை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதுபோன்று Humanity First (மனிதம் முதலில்) என்ற நமது சேவை அமைப்பும் சிறிது பங்களித்துள்ளது. ஜெர்மனிக்காரர்களிடமும் நான் பங்கேற்குமாறு கூறியுள்ளேன். இந்தப் பணிகளைச் செய்பவர்களை இந்த சேவைகள், முஹ்ஸின்களில் சேர்க்கிறது. அதேபோன்று இந்த சேவைக்காக நிதியைத் தருபவர்களும் முஹ்ஸின்களில் அடங்குவர். ஓர் அஹ்மதி காலத்தின் இமாமை ஏற்றுள்ளார். தக்வாவின்படி செல்வதாக உறுதிப்பாடு செய்துள்ளார். முடிந்த வரை அந்த தக்வாவின்படி செல்வதற்காக விதிகளைக் கடைபிடிக்க முயற்சியும் செய்கிறார். பிறகு முஹ்ஸின்களில் சேர முயற்சியும் செய்கிறார். இறைவன் கூறுகிறான்: நான் அத்தகைய மக்களுடன் தான் இருக்கிறேன். அத்தகைய மக்களுக்கு நான் எப்போதும் உதவி அளிக்கிறேன். நமது இளைஞர் அங்கு பணிசெய்து எமது பணிகளில் இவ்வாறு சிக்கல்கள் வந்தன. எவ்வாறு இறைவன் தனது வல்லமையின் ஒளியைக் காட்டினான்! அறியாத, உணர முடியாத வழியில் அந்தப் பிரச்சனைகளை தீர்த்து வைத்தான்? இதனால் அல்லாஹ்வின் இருப்பின் மீது நமக்கு மேலும் உறுதி ஏற்படுகிறது என்கின்றனர்.

அதுபோன்று நான் ஏற்கனவே கூறினேன். முஹ்ஸின் என்பதன் ஒரு பொருள் தன் மீது கவனம் செலுத்துதல்; தனது அறிவையும் ஞானத்தையும் முழுமையாக்க முயற்சி செய்தல் ஆகும். இந்த இஹ்ஸான் ஒருவர் தன் மீது காட்டுவதாகும். நல்ல சாலிஹான அமல்களை தனது வாழ்வின் அங்கமாக்குதல் ஆகும். இது ஒரு பொருள். பிறகு அதில் முன்னேறுதல். பிறகு இல்ம் மற்றும் மஃரிஃபத்தில் இருந்து, தான் பயன் அடைந்து அதனை தனது வாழ்வில் கொண்டு வருவதும் பிறகு மற்றவர்களையும் அதிலிருந்து பயன் அடையச்

செய்தலும் ஆகும். எவ்வளவு இல்ம் மற்றும் மஃரிஃபத் அதிகமாக இருக்குமோ அந்த அளவுக்கு அதிலிருந்து பிறருக்கு பயனளிக்க முயற்சியும் உருவாகும். பிறகு அதனால் முஹ்ஸின்களில் சேர்வதற்கான இன்னொரு மிஃராஜ் (உயர் படித்தரம்) கிடைக்கிறது. அவர்களின் பாதம் பிறகு இன்னும் முன்னேறுகிறது. ஒரு புதிய வழி தெரிகிறது. பிறகு அது மேலும் மேலும் ஆன்மீக, நல்லொழுக்க முன்னேற்றத்தின் பக்கம் எடுத்துச் செல்கிறது. இந்த ஆன்மீக நல்லொழுக்க முன்னேற்றம் ஏற்படும் போது பிறகு இறைவனது அண்மையின் இன்னொரு வழி தென்படுகிறது. அல்லாஹ்வின் நெருக்கம் அதிகமாகிறது. அவனது பண்பு பற்றிய ஞானம் உருவாகிறது. இது ஒரு சுழற் சக்கரம் போன்றது. அது நன்மைகளைச் சுற்றியவாறு தக்வாவின் பல படித்தரங்களைக் கடந்து இறைவன் வரை கொண்டு சேர்க்கிறது. பிறகு இறைவன் தரப்பிலிருந்து மேலும் வாய்ப்பு தரப்படுகிறது. பிறகு மேலும் நன்மைகளின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. பிறகு அதன் விளைவாக அல்லாஹ்விற்குரிய கடமை, அடியார்களுக்குரிய கடமைகளைச் செய்வதற்காக அதிகப்படியான ஞானம் உருவாகிறது. இந்த விஷயங்களால் எத்தகைய முஹ்ஸின் ஆக மனிதன் ஆக வேண்டுமோ அவ்வாறே இறைவன் ஆக்குகிறான். இவர் உபகாரத்தை சொல்லிக்காட்டும் முஹ்ஸின் ஆக இருக்கமாட்டார். மாறாக, இவர்கள் மற்றவருக்காக தியாகம் செய்து தம்மீது ஒரு கஷ்டத்தை போட்டுக் கொள்கின்றனர். தமது உரிமைகளை விட்டு விடுகின்றனர். பிறகு தமது உரிமையைப் பெறுவதில் அழுத்தம் காட்டாதீர்கள். பிறரது உரிமையை வழங்குவதில் கவனம் செலுத்துங்கள் என்ற விதியின்படி செயல்படுகின்றனர்.

நான் எப்போதும் மற்றவருக்கு மத்தியில் என்னைச் சந்திக்க வருகிற மார்க்கத் தலைவர்கள் உலகியலாளர்கள் மத்தியில் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்ற – இஸ்லாமிய போதனைகளைப் பற்றி சரியாக தெரிந்து வைத்திராதவர்கள் மத்தியில் இதனையே எடுத்து வைக்கிறேன். உலகியல்வாதிகளின் கவனம் எமது உரிமைகளைத் தாருங்கள் என்று கேட்பதில் உள்ளது. தமது உரிமைகளுக்கு ஓர் இலக்கு நிர்ணயித்து அதனைப் பெறுவதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்கின்றனர். இதன் விளைவாக உரிமையைக் கேட்பவரும், நீதியுடனும் தக்வாவுடனும் நடந்து கொள்வதில்லை. உரிமையைத் தருபவரும் நீதியுடனும் தக்வாவுடனும் நடந்து கொள்வதில்லை. இதில் முஸ்லிம்களும் அடங்குவர். முஸ்லிம் அல்லாதவர்களும் அடங்குவர். இதன் விளைவாக குழப்பம் உருவாகிறது. ஆனால் இஸ்லாம் ஒரு போதனையைத் தருகிறது. அதன்படி அமல் செய்தால் இப்போது உலகிலுள்ள சில நாடுகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குறைந்தபட்சம் முஸ்லிம் நாடுகளிலாவது அழிந்து விடும். இஸ்லாம் தருகின்ற போதனையாவது பிறரது உரிமையை வழங்குங்கள். ஒருவர் தமது உரிமையைக் கேட்பதற்கு முன்பாகவே அவரது உரிமையை வழங்குங்கள். மேலும் அவர் மீது கருணை காட்டி மனிதநேய கண்ணியத்தை நிலைநாட்டியவாறு முஹ்ஸின்களில் சேருங்கள். அவர்களுக்கு அவர்களது தேவையை விட அதிகமாக அவர் மீது பரிவுகாட்டுங்கள்.

ஹதீஸ்களில் வருகிறது: உதாரணமாக தொழிலாளர்களைப் பற்றி வருகிறது. நீங்கள் உடுப்பதையே உங்கள் பணியாளர்களுக்கு உடுத்தக் கொடுங்கள். நீங்கள் உண்பதையே பணியாளர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். இந்த போதனையை உலகில் பரந்த அளவில் செயல்படுத்தப்பட்டால் எந்த நாட்டின் குடிமக்களும் பட்டினியாக இருக்க மாட்டார்கள். எவரது உரிமையும் பறிக்கப்படாது. எவரும் நிர்வாணமாக இருக்கமாட்டார். பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளின் படங்கள் டி.வி. –யில் காட்டப்படுகின்றன. குழந்தைகள் பசி பட்டினியுடன் வாழ்க்கையை கழிக்கின்றனர். உணவு பற்றாக்குறையால் பலர் மரணப் படுக்கையில் உள்ளனர். பல தாய்மார்களுக்கு உணவின்மையால் குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியவில்லை. செல்வங்களை அபகரிக்க சிந்தனை செய்வதை விடுத்து உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனம் செலுத்தினால் முஹ்ஸின் ஆனவாறு பிறரது தகுதிகளை வளமாக்கினால், ஏழைகளை சொந்தக் கால்களில் நிற்கச் செய்தால் இன்று உலகில் ஏற்பட்டுள்ள பல பிரச்சனைகள் தன்னாலேயே முடிந்து விடும்.

முஸ்லிம் நாடுகளும் நமது நாட்டிலும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தினால், தலைவர்கள் தமது வங்கி இருப்பை அதிகமாக்க முயல்வதற்கு பதில் பொதுமக்களை கவனித்தால் முஹ்ஸின் ஆக முயன்றால், தக்வாவின்படி நடந்தால் இந்த அழகிய போதனைக்குப் பிறகு நமது முஸ்லிம் நாடுகளில் ஒருபோதும்

நிம்மதிக்குலைவு, ஏழ்மை ஏற்பட்டிருக்காது. ஆனால் துரதிஷ்டவசமாக முஸ்லிம் நாடுகளிலேயே இந்நிலை அதிகமாக உள்ளது. பிறகு அன்னியர் அதிலிருந்து பயன் பெறுகின்றனர். இந்த பிரச்சனைகள் எழுந்த போது இதனைப் பற்றி கூறும் போது நீதியுடன் நடக்குமாறு கூறிய போது நீங்களும் அதன்படி செயல்பட்டிருந்தால் இந்த எல்லா பிரச்சனைகளும் தன்னால் முடிந்து போயிருக்கும் என்று நான் கூறும்போது, இதுவே உண்மையில் தேவை, இது ஓர் அழகிய போதனை என்று பெரும்பாலார் கூறுகின்றனர். ஆனால் தமது சபைக்கு திரும்பிச் செல்லும்போது தமது சுயநலத்திற்கு இரையாகி விடுகின்றனர்.நாட்டுநலன் சமுதாய நலன் சீர்கெட ஆரம்பிக்கின்றது. உண்மையிலும் நீதியிலும் நின்று நாட்டுநலன் மீது அக்கறை செலுத்த வேண்டும். அதே வேளையில் பிறரது உரிமையைப் பறித்து சொந்த நாட்டுக்குத் தருவதும் அல்ல. மனிதன் முதலில் தன்னை சீர்படுத்துவது போன்று நாடுகள் முதலில் தம்மை சீர்படுத்த வேண்டும். ஆனால் மற்றவரின் செல்வத்தை அபகரிக்க தமது நாட்டு நலன் என்ற பாசாங்கு செய்வது, மற்றவரின் நலனை சீரழித்து தனது உரிமை – பெயரளவிலான உரிமையைப் பெறுவது என்பது தவறாகும். இவை அனைத்தும் சுயநலத்தைக் காட்டும் விஷயங்களாகும். இவை அனைத்தும் குழப்பத்தை விலைகொடுத்து வாங்குவதாகும். எவ்வாறிருப்பினும் ஒவ்வோர் அஹ்மதியும் தக்வாவில் நின்றவாறு முஹ்ஸின்களில் சேர்ந்தவாறு இறைவனின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இறைவனிடம் அண்மையில் வர முயற்சி செய்ய வேண்டும். இந்த ஒரு நிலையில் மட்டும் தான் ஒருவர் தன்னையும் சீர்திருத்துபவராகவும் முடியும். சமுதாயத்தை பொறுத்த அளவில் தனது எல்லைகுட்பட்ட பகுதியை குழப்பத்தில் இருந்து காப்பாற்றவும் முடியும். நாம் முயற்சி செய்தவாறு அல்லாஹ்வின் பண்பைப் பெற்றவாறு அல்லாஹ்வின் பண்பை தமது வட்டத்தில் தமது தகுதிக்கேற்ப கைக்கொள்ள முயலுங்கள். அடியாருக்குள்ள உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அதனை வழங்க தயாராக இருங்கள். பிறகு உலக நிஃமத்துகள் நமது சேவகர்களாகி விடும். நமது வாழ்வில் இந்த உலகப் பொருள்களின் மதிப்பு எளிதாகி விடும். பிறகு அதுவே தக்வாவில் வளர்ச்சியை ஏற்படுத்தும். பிறகு மனிதன் இறைவனுக்காக பணி செய்பவனாவான். சுருக்கமாக, எப்படிப் பார்த்தாலும் நமது சிந்தனையின் இலக்கு இறைவனின் திருப்தியாக இருக்க வேண்டும். அல்லாஹ் இவ்வாறு இஹ்ஸான் (நன்மை) செய்பவர்களுக்கு அருள் புரிகிறான்.

திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான்: *வலா மன் அஸ்லம வஜ்ஹஹூ லில்லாஹி வஹூவ முஹ்ஸினுன் ஃபலஹூ அஜ்ரஹூ இன்த ரப்பிஹி வலா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹூம் யஹ்ஸனூன் - அறிந்து கொள்ளுங்கள். இது உண்மையாகும். ஒருவர் தன்னை இறைவனிடத்தில் ஒப்படைத்து விட்டால் மேலும் அவர் நன்மை செய்பவராக இருந்தால் அவரது கூலி அவரது இறைவனிடம் உள்ளது. அவர்களுக்கு எந்த பயமும் இல்லை. அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள். (2:113)*

எனவே அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இலக்கு என்னையே பெறுவதாகி விடும். பிறகு என்னையே நீங்கள் சுற்றி வருவீர்கள். எனது விருப்பம் கிடைக்கும் ஒரு மூஃமின் இறையச்சமுள்ள அடியார் முற்றிலுமாக தன்னை இறைவனிடம் ஒப்படைத்து விடும் போது பிறகு இறைவன் அவருக்கு பொறுப்பேற்றுக் கொள்பவனாகி விடுகின்றான். அவனது எல்லா கவலைகளும் போய் விடுகின்றன. அவரை எல்லா கவலைகளும், பயமும் ஒன்றுமற்றதாகி விடுகின்றன. அவர் தன்னிடமுள்ள அனைத்தையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்தவாறு அவனுக்கு முன் தூய மனதுடன் குனிபவராகி விட்டால் முஹ்ஸின் ஆகியவாறு தனது எல்லா திறமைகளையும் படைப்பின சேவைக்காகவும் மனித நேயத்திற்காகவும் செலவிடுபவராகி விட்டால் பிறகு அவருக்கு என்ன பயமும் கவலையும் இருக்கப் போகிறது? இந்த இரு பணிகளும் மனிதனை இறையன்பின் அணைப்பில் கொண்டு வந்து விடுகின்றன. இது உண்மையான தக்வாவின் அடையாளமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முத்தகியாவதற்கு அவசியமாவது விபச்சாரம், திருட்டு, பிறரது உரிமையைப் பறித்தல், காட்டுதல், தன்னைத்தானே பெருமை பேசுதல், பிறரை இழிவாக நினைத்தல், கருமித்தனம் ஆகிய பெரிய பெரிய

பாவங்களிலிருந்து முற்றிலும் விலகி அதற்கு எதிராக உயர் நல்லொழுக்கத்தில் முன்னேற வேண்டும். மக்களுடன் சுமூக உறவுடனும் இனிய சுபாவத்துடனும் பரிவுடனும் பழகுதல் வேண்டும். இறைவனுடன் உண்மையான பற்று, சத்தியம் ஆகியவற்றைக் காட்ட வேண்டும். இறைவனிடம் மகாமே மஹ்மூதை (புகழ்ச்சிக்குரிய படித்தரத்தை) தேட வேண்டும். இந்த விஷயங்களால் மனிதன் முத்தகி என்று அழைக்கப்படுவான். எவர்கள் இந்த விஷயங்களின் தொகுப்பாக இருப்பாரோ அவரே உண்மையில் முத்தகியாவார். அதாவது ஏதேனும் ஒரு நல்லொழுக்கம் தனித்தனியாக ஒவ்வொரு நபரிடமும் இருந்தால் அவர் முத்தகி என்று அழைக்கப்பட மாட்டார். எல்லா உயர் நல்லாழுக்கமும் திரண்டு ஒருவரிடம் இல்லாதவரை ஒருவர் முஹ்ஸின் ஆக முடியாது. அவ்வாறு இருக்கின்ற மனிதர்களைப் பார்த்தே *லா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹுூம் யஹ்ஸனூன் (7:36)* என்று கூறப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு வேறென்ன வேண்டும்? அல்லாஹ் அத்தகையோரின் பொறுப்பாளர் ஆகி விடுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: *வஹுூவ யதவல்லஸ் ஸாலிஹீன் - அவன் அந்த நல்லவர்களுக்கு உதவி செய்கின்றான். அவர்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான் (7:197).*

ஹதீஸில் வருகிறது. அல்லாஹ் அவர்கள் பிடிக்கின்ற கையாகி விடுகின்றான். அவர்கள் பார்க்கின்ற கண்ணாகி விடுகின்றான். அவர்கள் கேட்கின்ற காதாகி விடுகின்றான். அவர்கள் நடக்கின்ற காலாகி விடுகின்றான்.

இன்னொரு ஹதீஸில் வருகிறது. எவர் எனது வலி (இறை நேசர்) இடம் பகைமை காட்டுவாரோ அவரிடம் கூறுகிறேன். நீ என்னை எதிர்ப்பதற்கு தயாராக இருந்து கொள்.

இன்னொரு ஹதீஸில் வருகிறது. ஒருவர் இறைவனது வலி –யின் மீது தாக்குதல் தொடுக்கும் போது, பெண் சிங்கத்தின் குட்டியை அதனிடமிருந்து பிரிக்க முயலும் போது அது எவ்வாறு ஆவேசம் கொண்டு பாய்ந்து வருமோ அதைப்போன்று இறைவனும் அந்த மனிதர் மீது ஆவேசம் கொள்கிறான்.

எனவே, அல்லாஹ்வின் இறைநேசராக ஒருவர் ஆகி விட்டால் அவர் எவ்வளவு நற்பேறு பெற்றவர்? அவ்வாறு இறைநேசராக ஒருவர் ஆகி விடும்போது அவரது கவலை, துயரங்கள் எல்லாம் அப்படியே முடிந்து போய் விடுகின்றன. வருங்காலத்தில் நன்மைகளைச் செய்வதன் பக்கம் அவருக்கு கவனம் ஏற்படுகிறது. கடந்தகால தீய செயல்கள் அவரை விட்டு மன்னிக்கப்பட்டு விடுகின்றன. மனிதனுக்கு தனது வருங்காலத்தைப் பற்றிய பயம் இருக்கிறது. உதாரணமாக, பல பிரச்சனைகளில் சிக்கியிருப்பவர்கள் நமக்கு என்ன நடக்குமோ? என்ன ஆகுமோ? என்று கவலை அடைகின்றனர். இவர்களுள் சிலர் கவலையினால் அதிகமாக உடல் மெலிந்து விடுகின்றனர். சந்திக்கும் போது அவர்களின் முகம் வாடி இருக்கிறது. சிலர் அவர்களின் வியாபார சிக்கல்களினால் இனி என்ன செய்யப் போகிறோம் என்று கவலையடைந்துள்ளனர். மாணவர்கள் தமது தேர்வை நினைத்து கவலை அடைகின்றனர். சுருக்கமாக வருங்காலத்தில் நடக்கவிருக்கின்ற நிகழ்வுகள் மனிதனை கவலைக்குள்ளாக்கி விடுகின்றன.

அதேபோன்று நடந்து முடிந்து போன விஷயங்கள் குறித்த கவலைகள் இருக்கின்றன. கவலை பெரிதாக இருக்கும் அளவுக்கு மனிதனது துயரமும் அதிகமாக உள்ளது. சில உலகியல்வாதிகள் தமது வியாபார நஷ்டங்களால் கவலைப்பட்டு நிரந்தர நோயாளியாகி விடுகின்றர். சிலர் பைத்தியமாகி விடுகின்றனர். சிலர் கடுமையான இருதய வேதனையால் படுத்த படுக்கையாகி விடுகின்றனர் அல்லது உலகை விட்டு விடைபெற்றுச் சென்று விடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் ஒரு முத்தகி – மூஃமின், இஹ்ஸான் செய்பவர் பற்றி இறைவன் கூறுகிறான்: அவருக்கு பயமும் இருக்காது. கவலையும் இருக்காது. மார்க்கவாதியான ஒரு மனிதர் அவருக்கு இறை பண்புகளைக் குறித்த சரியான ஞானம் இருக்கும் போது, அதற்கேற்ப தனது வாழ்வை அமைக்க முயற்சி செய்கிறார். ஒருபோதும் உலகியல் கவலைகள் அவரிடம் தடை ஏற்படுத்துவதில்லை. நிச்சயமாக நல்லவர்களுக்கும் பயம் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. கவலை கொள்ளும் நிலையும் வருகிறது. ஆனால்

அவை உலகியல் கவலையாக இருப்பதில்லை. மாறாக இறை திருப்தியைப் பெறும் கவலையாக இருக்கின்றன. இறைவனது கோபத்திலிருந்து தப்பிப்பதற்கான பயமாக இருக்கின்றது.

ஒரு கவிதையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது போன்று,

*உள்ளம் கவர்ந்தவனின் திருப்தி எப்போது கிடைக்கும்? – என்ற*
*இதே கவலையில் பகலும் இரவும் இருக்கின்றனர்.*

உள்ளம் கவர்ந்தவனை எப்போதும் திருப்திப்படுத்தும் கவலையே எப்போதும் அவர்களுக்கு இருக்கின்றது. அவர்களின் பிற கவலைகளை இறைகவனமும் இறை தியானமும் மறக்கடித்து விடுகிறது.

*அலா பி ஸிக்ரில்லாஹி தத்மயின்னுல் குலூப் - அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் திக்ரினால்தான் உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)* என்ற சப்தம் அவர்களுக்கு ஆறுதல் தருகிறது. இது பழைய கவலைகளையும் அகற்றி விடுகிறது. வருங்கால பயத்தையும் அகற்றி விடுவதாக ஆறுதல் வழங்குகிறது. தக்வாவின்படி செல்பவர்களின் பயம் அன்பு, நேசத்தின் பயமாகும்.

தக்வாவின் பொருளே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நிம்மதியைக் குலைக்கின்ற துடிப்பாகும். இந்த நிம்மதிக் குலைவு உள்ளத்திற்கு உறுதியை வழங்குகிறது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர் ஆக்குகிறது. உலகவாதியின் நிம்மதிக்குலைவு இதற்கு நேரெதிரில் உள்ளத்தின் மீது தாக்குதல் தொடுப்பதாக இருக்கிறது.

அல்லாஹ்வின் தக்வாவை கைக் கொள்பவர், முஹ்ஸின்களில் சேருபவர், அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், அடியாரின் மீதுள்ள கடமையையும் நிறைவேற்றுபவர் தனது செயல்களை கண்காணிப்பவர் ஆவார். அதன் பிறகு தான் இறை அருளுக்குக் காரணமாகிறார். இதுவே உலகவாதிகளின் பயம் மற்றும் கவலைக்கும் மார்க்கவாதியின் பயம் மற்றும் கவலைக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும்.

எனவே ஓர் அஹ்மதி தனது நிலையில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அது அவரை தக்வாவில் நடத்திச் செல்லும் மாற்றமாக இருக்க வேண்டும். முஹ்ஸின்களில் சேர்க்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கம் நமக்கு ஒவ்வொரு வினாடியும் கிடைக்க வேண்டும். நாம் இவ்வுலக, மறுவுலக கவலையிலிருந்து விலகி இருக்க வேண்டும். நமது கவலை என்று ஒன்றிருந்தால் அது இறைவனின் அன்பை உள்ளத்தில் அமர்த்துவதற்காகவே இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருட்கொடைகள் அதனால் இன்னும் அதிகமாகும். அல்லாஹ்வின் நேசத்தின் உயர் தகுதியை நாம் பெற்று விட்டால் பிறகு அல்லாஹ் நிச்சயமாக நம்முடன் இருப்பான். பிறகு அல்லாஹ்வின் உபகாரங்கள் நான் கூறியது போன்று இன்னும் அதிகமாகும். தனது அடியான் முஹ்ஸின் (நல்லவர்) ஆகிக் கொண்டிருக்கிறார் என்பதை அல்லாஹ் பார்ப்பான். தனது திருப்தியைப் பெறுவதற்காக தனது பண்பை மேற்கொண்டுள்ளார் என்பதை பார்க்கிறான். பிறகு நான் ஏன் எனது உபகாரங்களின் மழையை அவர் மீது பொழியக் கூடாது? என்று அல்லாஹ் நினைப்பான். அல்லாஹ் பல மடங்கு அதிகமாக்கித் தருவான். இறைவனது உபகாரங்களின் மழை பொழியும் போது இவ்வுலகின் கவலைகள் அகலுவது மட்டுமின்றி அவன் உபகாரங்கள் மற்றும் வெகுமதிகளை சமாளிப்பது கூட சிரமமாகி விடும்.

**ஒரு மூஃமினுடைய உண்மையான தக்வாவின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையான தக்வாவுடன் அறியாமை ஒன்றுசேராது. உண்மையான தக்வா தன்னுடன் ஓர் ஒளியை கொண்டிருக்கும். அல்லாஹ் கூறுவது போன்று, நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் முத்தகியாக உறுதியான பாதத்துடன் நின்றால் அல்லாஹ்வுக்காக இத்திகா (இறையச்சம்) என்ற பண்பில் நிலைத்து நின்றால் உங்களுக்கும் மற்றவருக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவான். அந்த வித்தியாசம் என்னவெனில் உங்களுக்கு ஓர் ஒளி தரப்படும். அந்த ஒளியுடன் நீங்கள் எல்லா வழிகளிலும் நடப்பீர்கள். அந்த ஒளி உங்கள் எல்லா செயல்களிலும், சொற்களிலும் ஆற்றல்களிலும் சிந்தனைகளிலும் வந்து விடும்.

உங்கள் சிந்தனையிலும் ஓர் ஒளி இருக்கும். உங்கள் கண்களிலும் ஒளியிருக்கும். உங்கள் காதுகள், உங்கள் பேச்சுக்களில் உங்கள் ஒவ்வொரு அசைவு, அமைதி அனைத்தும் ஒளிமயமாகி விடும். நீங்கள் செல்லும் வழி ஒளி மயமாகி விடும். உங்களது வழிமுறைகள், ஆற்றல்கள் உங்கள் புலன்களின் வழி அனைத்தும் ஒளியால் நிரம்பி விடும். நீங்கள் ஒளியின் ஊற்றாகி ஒளியிலேயே செல்வீர்கள். இந்த நிலைக்கு அல்லாஹ்வின் ஓர் அடியார் வந்து விட்டால் அல்லது வர முயன்றால் பிறகு அவரது எதிரிகளும் அல்லாஹ்வின் பிடியில் வந்து விடுவர். நம்மை இந்த தகுதியைப் பெறுபவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக! நாம் அருளை பெறுபவர்களாகவும் அருளை வழங்குபவர்களாகவும் எதிரிகளிடமிருந்து தப்பித்து சென்று கொண்டிருப்போமாக! எதிரிகளின் ஒவ்வொரு விஷயமும் அவர்கள் பக்கமே திரும்பட்டுமாக! இந்த நிலை ஏற்படும்போது அல்லாஹ்வின் அன்பை பெறுபவர்களாவோம். பிறகு மனிதகுல தொண்டிற்கு தயாராகி விடுவோம். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகிற்கு தருபவர்களாவோம். அந்த நிலையில் நாம் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் பிடிக்கப்படுவதையும் காண்போம். அல்லாஹ் நம்மை இந்த துஆவையும் இந்த தகுதியையும் பெறுபவர்களாக்குவானாக!

இன்று நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுவேன். கண்ணியத்திற்குரிய டாக்டர் முஹம்மத் ஆமிர் சாஹிப் டிஸ்பென்ஸர் டாக்டர் என்று அழைக்கப்பட்டார். பாகிஸ்தானின் பலுசிஸ்தானை சார்ந்தவர் ஆவார். இவரை டிசம்பர் 1, 2011 அன்று கிளினிக்கில் நுழைந்து அடையாளம் தெரியாத சிலர் சுட்டு ஷஹீதாக்கி விட்டனர். இவரது ஷஹாதத் தகவல் தாமதமாக கிடைத்தது. ஏனெனில் அந்த ஊரில் ஜமாஅத் இல்லை. எனவே தெரியாமல் போய் விட்டது. அவரது மனைவியும் அதே மருத்துவமனையிலேயே வேலை செய்து வந்தார். காயிதாபாத்தின் தேரு பகுதியில் பைஅத் செய்து இருந்தார். குடும்பத்தில் இவர் மட்டுமே அஹ்மதி ஆவார். பாகிஸ்தானிலுள்ள ஒரு பிரபல தீவிரவாத அமைப்புடன் இவர் தொடர்பில் இருந்தார். எனவே இவர் அஹ்மதியானதை அவர்களால் சகிக்க முடியவில்லை. இதுவும் அவர் ஷஹீதாக்கப்பட்டதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இவரது குடும்பம் முஸஃப்பர் கட் பகுதியில் வசித்தது. 1994-ல் பைஅத் நடந்தது. 1998-ல் திருமணம் நடந்தது. இவருக்கு சிறு சிறு குழந்தைகள் உள்ளன. நல்லியல்பு கொண்டவராக இருந்தார். இனிய சுபாவம் கொண்டவராக இருந்தார். அல்லாஹ் மர்ஹூமுக்கு மன்னிப்பு வழங்குவானாக. அவரது தகுதியை உயர்த்துவானாக. தனது திருப்தியின் ஜன்னத்தில் சேர்ப்பானாக. அவரது உறவினர்களுக்கு அழகிய பொறுமையை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 03.02.2012**

Translated by : Muallim M. NIJAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456